## புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு

# மத்திய கலாசார நிதியம்

# வெற்றிடங்கள்

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சின் கீழ் உள்ள மத்திய கலாசார நிதியத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமை வாய்ந்த தொழில்சார்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பணிப்பாளர் (அபிவிருத்தி) (வெற்றிட எண்ணிக்கை 01)

| | |
|---|---|
| **சம்பள அளவு** | HM1-1 (ரூபா 80,295 - 15x2,270 - 114,345/-) (மு.சே. சுற்றுநிருப இலக்கம் 2/2016) |
| **வயதெல்லை** | 30 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட தொல்லியல் அல்லது கட்டிடக்கலை தொடர்பான ஆரம்பப் பட்டத்துடன் தொல்லியல் அல்லது கட்டிடக்கலை தொடர்பில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

அரசு, அரச கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் திட்டத்தை வழங்குதல், அமுலாக்குதல், மதிப்பிடுதல் மற்றும் முன்னேற்ற நிர்வாகம் தொடர்பான கடமைகளுக்கு இயைபான முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை பதிவைக் கொண்டிருத்தல். (இந்த 15 வருடத்தில் 05 வருடங்கள் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பெற்றுக்கொண்டன் பின்னராக இருத்தல் வேண்டும்.)

**ஆட்சேர்க்கும் முறை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமாகும்.

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) (வெற்றிட எண்ணிக்கை 01)

| | |
|---|---|
| **சம்பள அளவு** | HM1-2 (ரூபா 54,550 - 10x1,375 - 15x1,910 - 96,950/-) (மு.சே. சுற்றுநிருப இலக்கம் 2/2016) |
| **வயதெல்லை** | 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வியாபார நிர்வாகம்/ அரச நிர்வாகப் பட்டம் அல்லது ஆளணி நிர்வாகம், முகாமைத்துவம் போன்ற பாடங்களை உள்ளடக்கிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை**

திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமாகும்.

### உள்ளகக் கணக்காய்வாளர் (வெற்றிட எண்ணிக்கை 01)

| | |
|---|---|
| **சம்பள அளவு** | HM1-2 (ரூபா 54,550 - 10x1,375 - 15x1,910 - 96,950/-) (மு.சே. சுற்றுநிருப இலக்கம் 2/2016) |
| **வயதெல்லை** | 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனம் அல்லது சான்றுபடுத்திய கணக்காளர்களின் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியல் மற்றும் கணக்காய்வு பாடங்கள் சகிதம் பெற்றுக்கொண்ட பட்டம் அல்லது இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனம் / பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனம் அல்லது சான்றுபடுத்திய கணக்காளர்களின் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை சான்றிதழ் அல்லது இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் உயர் டிப்ளோமா சான்றிதழ் அத்துடன் அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை**

திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமாகும்.

### கணக்கியல் அதிகாரி (வெற்றிட எண்ணிக்கை 03)

| | |
|---|---|
| **சம்பள அளவு** | JM1-1 (ரூபா 42,600 - 10x755 - 18x1135 - 70,580/-) (மு.சே. சுற்றுநிருப இலக்கம் 2/2016) |
| **வயதெல்லை** | 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணக்கியல் பாடத்தை உள்ளடக்கிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனம் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்கியல் நிறுவனம் அல்லது சான்றுபடுத்திய கணக்காளர்களின் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் கணக்கியல் உயர் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்

அத்துடன்

அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் தொடர்பான ஒரு (01) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை**

திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமைத்துவம் சகிதமாகும்.

**பொதுத் தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

(அ) இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனையவை**

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம் அல்லது நியதிகள் சட்ட சபையில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக தமது நிறுவனத் தலைவரின் இணக்கத்தை உள்ளடக்கிய கடிதம் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்).

இதற்காக முன்வருவதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்கள் www.ccf.gov.lk/notices எனும் இணையதளத்திலிருந்க தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தமது தகைமைகளை உறுதி செய்வதற்காக சமர்ப்பிக்கும் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் 2024-07-27ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் ''பணிப்பாளர் நாயகம், மத்திய கலாசார நிதியம், 212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய கலாசார நிதியம்,**
**212/1, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**